**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-35**

| | |
|---|---|
| Name | திரு. கங்காதரன் |
| Father Name | V.D சண்முகம் |
| Village /Area | 3/0A வெற்றிலைக்கார தெரு. |
| Taluk | ஆரணி தி.மா. |
| Occupation | Retired Co-op Town Bank |
| Age | 71 |
| Religion | Hindu |
| Aadhar Card No. | 9824 6390 3217 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 27.11.2025.

**4, 5, 6, 8,9, 12, 15 எதிரிகள் ஆஜர். 3, 7, 10, 11, 13, 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச. பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் ஆரணி நகர கூட்டுறவு வங்கியில் பொது மேலாளராக பணிபுரிந்து 2012ம் ஆண்டு மே மாதம் பணி ஓய்வு பெற்று, தற்போது ஆரணி, வெற்றிலைக்கார தெருவில் வசிக்கிறேன். இதற்கு முன்னர் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னிடம் 18 Pay Orderகளின் உண்மை பிரதிகள் மற்றும் சாமி எலக்ட்ரிகல்ஸ், நியூ வெங்கடேஸ்வரா எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் வங்கி கணக்க விவரங்களை இவ்வழக்கு விசாரணைக்காக என்னிடம் கேட்டார். நான் அவைகளை ஆய்வாளரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த சாமி எலக்ட்ரிகல்ஸின் Statement of Accounts (Account No.1459)ன் நகல் **அ.சா.ஆ.18** ஆகும். நான் கொடுத்த நியூ வெங்கடேஸ்வரா எலக்ட்ரிக்கல்ஸின் Statement of

Accounts (Account No.1423)ன் நகல் **அ.சா.ஆ.19** ஆகும். சாமி எலக்ட்ரிகல்ஸ்க்கு நான் கொடுத்த 13 Pay Orderகள் **அ.சா.ஆ.20 வரிசை** ஆகும். நியூ வெங்கடேஸ்வரா எலக்ட்ரிகல்ஸ்க்கு நான் கொடுத்த 5 Pay Orderகள் **அ.சா.ஆ.21 வரிசை** ஆகும். வேறு எதுவும் எனக்கு நினைவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, அனுமதி வழங்கப்படுகிறது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

09.04.2012 தேதி வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போது Pay Order எண்.023087 மற்றும் 023089 ஆகிய இரண்டு MVI ஆரணி என்ற பெயருக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதை தாங்கள் பார்வையிட்ட போது அவை இரண்டும் போலியான Pay Orderகள் என்றும், அவை இரண்டும் தங்கள் வங்கியின் இரண்டு Pay Orderகளை இணைத்து ஜெராக்ஸ் எடுத்தது போல் உள்ளது என்றும், Pay Orderஎடுப்பதற்காக எழுதப்பட்டுள்ள Challanகளில் உள்ள பெயர்களை கொண்டு எடுத்தவர் யார் என்று உறுதியாக கூறமுடியாது என்றும், Pay Order எடுப்பதற்காக யார் விண்ணப்பித்தாரோ அவர்தான் வங்கியில் Pay Order அவர்தான் பெற முடியும் மற்றபடி யார் வேண்டுமானாலும் யாருக்காகவும் Pay Order எடுக்கலாம் என்று சொன்னேன் என்றால், எனக்கு அதுபற்றி நினைவில்லை, சொல்லியிருக்கலாம்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

Pay Orderக்கு எண் கொடுக்கப்பட்டுள்ளதால் அது சம்மந்தமாக

வங்கியில் விண்ணபித்த ஆவணங்களை பார்த்தால் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால், சரிதான். அரசு தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்த போது என்னிடம் காட்டப்பட்ட இரண்டு ஒளி நகல் Pay Orderகளிலும் சாமி எலக்ட்ரிகல்ஸ் என்பவருக்கு கொடுக்கப்பட்டதாகதான் இருக்கிறது என்றாலும், MVI ஆரணிக்கு கொடுக்கப்பட்டதாக இல்லை என்றாலும், அது சரிதான். அந்த Original Pay Orderயை ஜெராக்ஸ் எடுத்தால் அப்படித்தான் இருக்கும் என்றால், அப்படித்தான் இருக்கும்.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM
Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet